# பட்டினப்பாலையில் சங்ககால மக்களின் பண்பாட்டு மரபுகள்

முனைவர் அ. நடராஜன்
natarajan.lingu@gmail.com

## முன்னுரை

இலக்கியங்கள் காலக்கண்ணாடி என்ற கூற்றின் அமைவுடன் நோக்கும்கால், ஓர் இலக்கியம் தான் தோன்றிய காலத்தில் நிலவியப் பொருளாதாரம், சுற்றுசூழல், அரசியல் போன்ற காரணிகளுடன் மக்களின் வாழ்வியலான பண்பாட்டையும் இயம்புவதாக பொறுத்தலாம். "மனிதன் தனது சுற்றுச் சூழலைத் தனக்கேற்ப மாற்றித் திருத்தி தனது புற வாழ்வியலை ஒழுங்குப்படுத்தித் திட்டமிட்டுச் செய்யப்படும் கூறுகள், வாழ்க்கைப் பற்றிய நம்பிக்கைகள், சடங்கு மதிப்புகள், சமூகக் கருத்துக்கள் அடங்கிய கூறுகள் பண்பாடு எனப்படும்."[1] இலக்கியங்களின் தேவையும், தன்மையும் அவ்விலக்கியம் தோன்றிய காலகட்டத்தின் அனைத்து நிலைகளையும் தன்னுள் கட்டமைத்து காட்டுவனவே என கொள்ளலாம். அவ்வகையில் தமிழ் இலக்கிய வரலாற்றில் கிடைக்கப்பெற்ற முதல் இலக்கியங்களாக வரையறுக்கப்பெறும் சங்க இலக்கியங்களான எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் தமிழர்களின் அரசியல், பொருளாதாரம், சமூக அமைப்பு போன்ற பண்பாட்டு விழுமியங்களை பல நிலைகளில் விளக்கியுள்ளதைக் காணமுடிகிறது. இவற்றில் பத்துப்பாட்டு நூல் வரிசையில் ஒன்றான பட்டினப்பாலை கடியலூர் உருத்திரங்கண்ணனாரால் சோழ மன்னன் கரிகால் பெருவளத்தானின் சிறப்பை எடுத்து இயம்பும் வண்ணம் பாடப் பெற்றிருப்பினும், பண்பாட்டுகருத்துக்கள் இலக்கியம் முழுமையும் விளக்கியுள்ளமை புலப்படுகின்றன. இவ்வாறு ஆசிரியரால் பட்டினப்பாலையில் விளக்கப்பட்டுள்ள பண்பாட்டு கருத்துக்கள் உள்ளதன் நுணுக்கமாக ஆராய்ந்து விளக்குவதாக இவ்வாய்வு கட்டுரை அமைகிறது.

## பண்பாடு பொருள் விளக்கம்

பழமையின் விரிவாக்கமும், மரபு வழியானத் தொடர்ச்சியும் பண்பாடு எனலாம். "பண்பாடு என்னும் சொல் மனிதனோடு மட்டுமே தொடர்புடையது.

இது பிற உயிரினங்களிடமிருந்து மனிதனைப் பிரி;த்துகாட்டுகிறது."2 இலக்கிய, இலக்கணங்கள் எவ்வாறு மனிதனால் விளைவிக்கப்படுகிறதோ அவ்வாறே பண்பாடும் மனிதனின் உற்பத்தியால் விளைந்து வளர்ந்து வந்தவையாக வரையறுக்கலாம். "பண்பாடு என்பது மக்களால் ஆக்கப்பெற்றக் கருவி அந்த ஊடகத்தைக் கொண்டே மக்கள் தங்கள் தேவைகளை நிறைவு செய்து கொள்கின்றனர்."[3] எவ்வகையிலும், பண்பாடு என்ற அமைப்பை காணம் போதும், மக்களையே மையமிட்டு நிற்பதை உணரலாம்.

**சங்க இலக்கியங்களில் பட்டினப்பாலை**

தமிழ் இலக்கியங்களில் கிடைக்கப்பெற்ற தரவுகளின் அடிப்படையில் சங்ககாலமே தமிழ் இலக்கியங்களின் தொடக்கமாக வரையறுக்கப்பட்டுள்ளன. அக்காலகட்டத் தமிழ் இலக்கியங்கள் பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும் ஆகும். எட்டுத்தொகை நூல்கள் பல புலவர்களால் பாடப்பட்ட தொகுப்பு என்பதால், அவற்றுள் புற இலக்கியங்கள் சேர, சோழ, பாண்டியர்களில் பலரையும் பற்றிய பாடல்களாகப் பாடப்பட்டுள்ளன. பத்துப்பாட்டில் வரிசைப்படுத்தப்பட்டுள்ள இலக்கியங்கள் ஒவ்வொன்றும் தனித்தனிப் புலவர்களால் பாடப்பட்டுள்ளதால் ஒவ்வொரு இலக்கியமும் வெவ்வேறு அரசர்களைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இயற்றப்பட்டுள்ளன. அவ்வகையில் கரிகால் பெருவளத்தானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இயற்றப்பட்டுள்ள இலக்கியம் பட்டினப்பாலை. பத்துப்பாட்டு இலக்கிய வரிசையில் ஒன்பதாம் இடத்தில் வைத்து போற்றப்படுவது பட்டினப்பாலை என்பதை,

**முருகு பொருநாறு பாண் இரண்டு முல்லை**
**பெருகு வளமதுரைக் காஞ்சி – மருஇனிய**
**கோல நெடுநல்வாடை கோல்குறிஞ்சிப் பட்டினப்**
**பாலை கடாத்தொடும் பத்து. (பழம்பாடல்)**

எனும் பழைய வெண்பா பாடல் விளக்குகிறது. இவ்விலக்கியங்களில் கரிகால் சோழனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பொருநராற்றுப்படையும், பட்டினப்பாலையும் இயற்றப்பட்டுள்ளன.

**பட்டினப்பாலையின் அமைப்பு முறை**

காவிரியாற்றின் சிறப்போடுத் தொடங்கும் பட்டினப்பாலை கரிகால் சோழனின் சிறப்பு, போர்த்திறம், தம் நாட்டை கட்டமைத்த முறைகளைப் போற்றி பாடும் முறையில் படைக்கப்பட்ட இலக்கியம். அகத்திணை ஒழுக்கத்தில் பாலைத்திணை ஒழுக்கத்தகை; கொண்டு பாடப்பட்டதால் ஆசிரியர் உருத்திரங்கண்ணனார் இவ்விலக்கியத்திற்குப் பட்டினப்பாலை எனப் பெயர் இட்டுள்ளார். இவ்வாறு பெயர்க் காரணங்களுடன் படைக்கப்பட்டுள்ள

பட்டினப்பாலை இலக்கியத்தினை அவற்றில் இடம்பெறும் பாடல்வரிகளின் கருத்துக்களைக் கொண்டு இலக்கியத்தின் அமைப்பை வகைபடுத்தி காட்டலாம்.

பாடல் அடி அமைப்பு முறை (பாடலின் அடிவாரியாக கருத்தமைவு)

1 - 7 காவிரியாற்றின் சிறப்பு

8 - 29 சோழநாட்டின் சிறப்பு, பாக்கம், ஊர்ச்சிறப்பு

30 - 32 பண்டமாற்று முறை (உப்பு, நெல்) மாற்று முறை

33 - 39 பூஞ்சோலை, பொய்கை, ஏரிச் சிறப்பு

40 -50 கோட்டை கதவுகள், அட்டில் சாலை சிறப்பு

51 - 76 வேள்விச் சாலை, தவப்பள்ளிச் சிறப்பு

77 - 105 பரதவர், மீன்துறை மற்றம் அவர்களின் வாழ்வியல் முறை

106 - 119 மாளிகைகள் அமைப்பு, காதல் வாழ்க்கை

120 - 141 பண்டகசாலையின் அமைப்பும், சிறப்பும்

142 - 158 பெண்களின் அழகு, பெண்களின் இறைவழிபாடு

159 - 183 பல வண்ணக் கொடிகள் அமைக்கும் வழக்கம்

184 - 193 துறைமுகம், கடல் வணிகத்தின் சிறப்பு

194 - 212 வணிகர்களின் சிறப்பு

213 - 218 பல மொழி பேசுவோர் கூடிவாழும் சிறப்பு

218 - 220 தலைவன் தன் நெஞ்சுக்குக் கூறல் (அகம் சார்ந்த செய்தி)

221 - 298 கரிகால் சோழன் அரசுரிமை பெற்றமை, பகைவர் மேல் போருக்குச் சென்று, வென்று அந்நாட்டை அழித்தமை, கரிகால் சோழனின் தனிச்சிறப்பு, உறையூரை விரிவுபடுத்தி மக்களைக் குடிபெயர்த்த நிலை

299 - 301 கரிகால் சோழனின் வெற்றிச் சிறப்பும், செங்கோல் சிறப்பும், தலைவன் தன் நெஞ்சுக்கு கூறியதும்.

**வானிலையைக் கணிக்கும் தமிழர் மரபு**

உலகம் நிலம், நீர், காற்று, வளி, விசும்பு ஆகிய ஐந்தால் ஆனது என்பதை,

**நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்**
**கலந்த மயக்கம் உலகம் ஆதலின்** (தொல்காப்பியம் நூ. 1589)

எனும் நூற்பாவின் வழி தொல்காப்பியம் விளக்குகிறது. இவ்வாறு தமிழர்களுக்கு உலகம் மற்றும் வானிலைப் பற்றிய அறிவு முழுமையாகவே இருந்துள்ளதைத் தொல்காப்பியம் மட்டுமின்றி தமிழில் தோன்றிய பல இலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன. அவ்வகையில் பட்டினப்பாலை மழை வரும் சூழலை வானில் காணும் நட்சத்திரங்களின் அமைப்பைக் கொண்டு

தமிழர்கள் கணித்துள்ளதை,

**வசையில் புகழ் வயங்கு வெண்மீன்**
**திசை திரிந்து தெற்கு ஏகினும்**
**புள் தேம்பப் புயல் மாறி**
**வான் பொய்ப்பினும் தான் பொய்யா**
**வானிலையைக் கணிக்கும் தமிழர் மரபு**

**(பட்டினப்பாலை, பாடல். 1-5)**

என கீழ்வானில் தோன்றும் வெள்ளி கோள்மீன் வடக்கில் நின்றால் மழை வரும.; ஆனால், அவ்வெள்ளி கோள் திசை திரிந்து தெற்கில் நின்றால் மழை பொழிவுக்கு தடை ஏற்பட்டு மழை விலகி சென்றுவிடும் என விளக்குகிறது. இக்கருத்தினை ஆய்ந்து காணும் போது பண்டையத் தமிழர்களின் மரபில் வானிலையைக் கணித்து செயல்படும் மரபு இருந்துள்ளமையோடு, தமிழர்களின் பண்பாட்டு மரபில் வானிலையும் ஒன்றாக அமைவதை காணமுடிகிறது.

பண்பாட்டு வளர்ச்சியில் தொழில் நிலையும் பொருளாதார வளர்ச்சியும்

சங்க இலக்கியங்கள் தமிழர்களின் வாழ்வியலை அகம்புறம் என பகுத்து பல கருத்துகளை மீட்சிசெய்து காட்டுவதோடு வேளாண்மை, வணிகம் உள்ளிட்ட தொழில் நிலையின் சிறப்பான செயல்பாட்டால் வளமானப் பொருளாதார வளர்ச்சியும் பெற்றிருந்தனர் என்பதையும் விளக்குகின்றன. இப்பொருளாதார வளர்ச்சியை அகன்ற கரும்பாலையில் முற்றியக் கரும்புகளின் சாறு காய்ச்சப்படும். அதன் பாகின் மணம் எங்கும் கமழும் என பட்டினப்பாலை விளக்குகிறது. இதனைப் போன்றே கருப்பஞ்சாற்றைக் காய்ச்சும் புகை சூழ்ந்தக் கொட்டில்கள் நிறைந்த ஆலைகள் என்று பெரும்பாணாற்றுப்படையும் இதே செய்தியை எடுத்துக்கூறகிறது. இதன் சிறப்பால் தொழில்நிலை மேம்பட்டதோடு பொருளாதார வளமும் பெற்ற மக்களாக தமிழர்கள் சங்ககாலத்தில் இருந்தனர் என்பதை,

**நேர் இழை மகளிர் உணங்கு உணாக் கவரும்**
**கோழி எரிந்த கொடுங்கால் கனங்குழை**
**பொற் காற் புதல்வர் புரவி இன்று உருட்டும்**
**முக்காற் சிறுதேர் முன் வழி விலக்கும்**

**(பட்டினப்பாலை, பாடல். 22-25)**

என வெய்யலில் உலரும் தானியங்களை உண்ண வரும் கோழியை மகளிர் தங்கள் காதுகளில் அணிந்திருந்த பொன் குழையை விட்டெறிந்து விரட்டினர் என ஆசிரியர் உருத்திரங்கண்ணனார் விளக்குகிறார். இதே கருத்தினை

**உற்றவர் கோழியே லெறிந்த வொன்குழை**

**மற்றத்தே மருள்கொடா வளமை சான்றேவே**

**(சீவகசிந்தாமணி – 89)**

என்று எந்த குறையும் இல்லாத செல்வம் உடையவர்களாக பொருளாதாரச் சிறப்பு பெற்றிருந்தனர் என்பதைச் சீவக சிந்தாமணியும் விளக்கியுள்ளது. தமிழர் மரபைக் காணுங்கால் தொழில் சிறப்போடு பொருளாதார வளமும் நிரம்ப பெற்ற சிறந்த மரபினராக விளங்கியுள்ளனர் என்பது தெளிவாகிறது.

**பட்டினப்பாலை காட்டும் மக்களின் ஒற்றுமை நிலை**

பண்பாடு என்பது புறத்தோற்றத்தைப் பற்றியது, அகத்தைப் பற்றியது என பல விளக்கங்கள் தரப்படுகின்றன. அவற்றில் தனித்து வாழ்ந்த மனிதர்கள் ஒன்றுபட்டு வாழ்வதும் பண்பாடே என்பதை “மனிதனை இணைத்து வைத்ததே பண்பாடு தான் என ஆய்வாளர், அ.மு.பரமசிவானந்தம் தனது நூலில் விளக்கியுள்ளார். இக்கருத்தினையே பட்டினப்பாலையும் மக்கள் ஒன்றுபட்டு பண்பாட்டுடன் வாழ்ந்தனர் என்பதை

**விலங்கு பகை அல்லது கலங்கு பகை அறியா**
**கொழும் பல்குடிச் செழும் பாக்கத்து**
**குறும் பல் ஊர் நெடுந் சோனாட்டு**

**(பட்டினப்பாலை, பாடல். 26-28)**

என வெய்யலில் உலர்த்தப்படும் தானியங்களை உண்ண வரும் கோழிகளை விரட்ட பெண்கள் தங்கள் காதுகளில் அணிந்துள்ள குழையினைக் கழற்றி விட்டெறிந்தனர். அக்குழைகள் சிறுவர்கள் சிறுதேர் கொண்டு விளையாடும் போது அவ்வோட்டத்தினைத் தடைபோல்; தடுக்கும். இவ்வாறான தடைகள் மட்டுமே உண்டு. புகார் நகரில் வாழும் மக்களுக்கு வேறு தடையோ, பகையோ எதுவுமின்றி ஒற்றுமையாக பண்பாட்டுடன் வாழ்ந்ததாக விளக்குகிறது.

**பண்பாட்டு மரபில் தொழில் நிலை**

பட்டினப்பாலையின் கதைக் களமாக வரையறுக்கப்பட்டுள்ள காவிரிப்பூம்பட்டினம் துறைமுக நகரமாதலால் தொழில்கள் சிறப்புற்று விளங்கியுள்ளதை சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள கருத்துக்கள் கொண்டு விளங்கி கொள்ளலாம். அவ்வகையில் ஏற்றுமதி, இறக்குமதியின் இரு பிரிவுகளாக உள்நாட்டு ஏற்றுமதி நிலத்தின் வழியாகவும், வெளிநாடுகளுக்கான ஏற்றுமதி நீரின் வழியாகவும் நடந்த புகழ்மிக்க நகரம் காவிரிப்பூம்பட்டினம் என பட்டினப்பாலை படம்பிடித்துக்காட்டுகிறது. இதற்கு சான்றாக உமணர்கள் வெண்ணிறமுடைய உப்பின் விலையைக் கூறி விற்றுத் தமிழர்களிடமிருந்து பெற்ற நெல்லை ஏற்றிச் சென்றனர் என்பதை

**வெள்ளை உப்பின் கொள்ளை சாற்றி**
**நெல்லோடு வந்த வால்வாய்ம் பஃறி**

**(பட்டினப்பாலை, பாடல். 29-30)**

என்ற பட்டினப்பாலை பாடல் விளக்குகிறது. இக்கருத்தினையே "தென்கழி வினாந்த வெண்கல் உப்பின்" என்று அகநானூறு பாடலும் எடுத்துரைக்கிறது. உப்பு விற்று நெல் ஏற்றி சென்ற செய்திகள் சங்க காலத்தில் தமிழர்கள் ஒரு ஒழுங்கமைவுடன் வணிக தொழில் செய்தனர் என்பதை விளக்கி நிற்கின்றன. மேலும் வணிகத்தின் சிறப்பாக முறையான சுங்கம் பெற்று வியாபாரம் செய்தனர் என்பதை

**தொல் இசைத் தொழில் மாக்கள்**
**காய் சினத்த கதிர்ச் செல்வன்**
**தேர் பூண்ட மாசு போல**
**வைகல் தொறும் அசைபு இன்றி**
**உல்கு செய்க் குறை படாது**

**(பட்டினப்பாலை, பாடல். 121-125)**

என தினமும் கதிர் வீசக்கூடிய கதிரவன் போல ஒரு பொழுதும் சோர்வின்றி, இளைப்பாராமல் நாள் தோறும் வணிகத் தொழிலின் ஒரு பகுதியாக சுங்கம் பெற்றதாக பட்டினப்பாலை ஏற்றுமதி, இறக்குமதி பொருள்களுக்கு சுங்கம் பெற்ற மரபை விளக்குகிறது. "சுங்கம் வசுலிக்கும் ஆட்களே உண்மை ஊழியர்கள் என அழைக்கப்பட்டனர். அவர்கள் நடுநிலையிலிருந்து சுங்கம் வாங்குவார்கள். கையுறை (லஞ்சம்) வாங்கமாட்டார்கள். தங்களுடைய வேலையைச் சுறுசுறுப்பாகச் செய்வார்கள். அவர்களை யாரும் ஏமாற்றிவிட முடியாது".4 தமிழகத்தின் பல பகுதிகளில் இருந்தும் கொண்டு வரப்பட்ட பொருள்கள், சீனா முதலான பிற நாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்ட பொருள் யாவும் அழிந்துவிடாமல் பாதுகாத்து வைப்பதற்கான இடமும், அதற்கான காவல் யாவும் நிறைந்த தொழில் நகரமாக காவிரிப்பூம்பட்டினம் காணப்பட்டதால், அகன்ற தெருக்களில் அளவிட்டுக் கூற இயலாத பொருள்கள், மிகுதியாக கடைகள் அமைத்து வியாபாரம் செய்தனர் என்று தமிழர்களின் பண்பாட்டு சிறப்பை எடுத்துரைக்கிறது பட்டினப்பாலை.

**வணிகர்களின் பண்பாட்டு வாழ்க்கை முறை**

பட்டினப்பாலை வேளாண்மை செய்வோர், பரதவர்கள் மற்றும் வணிகர்களின் வாழ்வியல் முறையைப் பற்றி விளக்கும் போது ஒவ்வொரு பிரிவு மக்களுக்கான வாழ்வியலை அவர்களின் பண்பாடகவே எடுத்தியம்புகிறது அவ்வகையில் வணிகர்களைப் பற்றி கூறும்போது,

**நெடு நுகத்துப் பகல் போல**
**நடுவு நின்ற நல் நெஞ்சினோர்**
**வடு அஞ்சி வாய் மொழிந்து**

**தமவும் பிறவும் ஒப்ப நாடி**
**கொள்வதூஉம் மிகைகொள்ளாது கொடுப்பதூஉம் குறை**
**கொடாது**

**(பட்டினப்பாலை, பாடல். 201-205)**

உழவுத் தொழிலை விரும்பிச் செய்யும் உழவர்களின் உழவிற்குப் பயன்படுத்தப்படும் ஏர்கலப்பையின் நுகத்தடியின் நடுவில் பொருத்தப்பட்டுள்ள பகலாணி இருபுறம் நடுவு நின்று சுமையைச் சரியாக பிரித்து கொடுப்பது போல, வணிகர்களும் நடுவு நிலை என்ற குணம் மாறாமல் வணிகம் செய்தனர், என்பதோடு தம் பொருட்கள், பிறர் பொருட்கள் என வேறுபடுத்தி காணாமல் ஒன்றாக எண்ணி தொழிலில் மரபுடன் செயல்பட்டனர் என்று பட்டினப்பாலை வணிகர்கள் தங்கள் தொழிலில் பண்பாட்டு மரபுடன் ஈடுபட்டதை எடுத்து விளக்கியுள்ளது.

**களவு அற்ற வாழ்க்கை முறை**

சிறந்த பண்பாட்டு பின்புலத்திற்கு, மக்கள் உண்மையாகவும், நேர்மை தவறாமல் வாழ்ந்தனர் என்பதோடு களவு தொழில் அற்ற சமூகமாகவும் வாழ்வதை அம்மக்களின் பண்பாட்டு அடையாளங்களில் ஒன்றாக விளக்கலாம். அவ்வாறே பட்டினப்பாலையில் உருத்திரங்கண்ணனார்

**தி நிறைந்த மலி பண்டம்**
**பொதி மூடைப் போர் ஏறி**
**மழை ஆடு சிமைய மால்வரைக் கவாஅன்**
**வரை ஆடு வருடைத் தோற்றம் போல**
**கூர் உகிர் ஞமலிக் கொடுத்தாள் ஏற்றை**
**ஏழகத் தகரோடு உகரும் முன்றில்**

**(பட்டினப்பாலை, பாடல். 136-140)**

என எவ்வித பாதுகாப்புமின்றி பண்டக சாலையில் பொருள் குவித்து வைத்துள்ள பொதிகள் மீது ஆண் நாய்களும், ஆட்டுக் கிடாய்களும் ஏறி விளையாடுமே தவிர பொருள் களவிற்கு இடம் இல்லை என்பதோடு பொருள்கள் வைத்தது போலவே, பாதுகாப்பு இல்லாவிட்டாலும் இருந்துள்ளன என்பதையும் ஆசிரியர் வரையறுத்து விளக்கியுள்ளமை நோக்குதற்கு உட்படுகிறது. இதனையே புறநானூறும்

**“களமலி குப்பை காப்பில வைகளம்”**

**(புறநானூறு, பாடல் - 230:3)**

இவ்வாறு களத்தில் நிறைந்து கிடக்கம் நெற்பொலி காவல் இல்லாமல் கிடப்பினும் பாதுகாப்;பாகவே இருந்தன என்பதை இப்பாடல் வரி விளக்குகிறது. இதன் அடிப்படையில் காணின் தமிழ் மக்கள் சங்க

காலங்களில் களவு தொழில் அற்ற பண்பாட்டுடனான வாழ்வை மேற்கொண்டனர் என்பதை அறியமுடிகிறது.

**சங்க கால தமிழ்ப் பண்பாட்டில் விளையாட்டுக்கள்**

சங்க இலக்கியங்கள் தமிழர்களின் பண்பாட்டு மரபுகளை எடுத்தியம்புதல்களில் விளையாட்டுகளும் ஒன்றாக உள்ளது. திணைக்குடிகளுக்கு ஏற்ப விளையாட்டிலும் மாறுதல்கள் காணப்படுவதை ஐவகைத் திணைப் பாடல்கள் எடுத்துக்காட்டுகின்றன. அவ்வகையில் பட்டினப்பாலை நெய்தல் நில திணை மக்களின் வாழ்வியலைக் காட்டுவதுடன் அப்பகுதியில் வாழும் பரதவ மக்களின் பண்பாட்டு மரபுகளை விளக்கும் வகையில் அம்மக்களின் பகல், இரவு விளையாட்டுகளையும் எடுத்துக்கூறுகிறது. அவ்வகையில் நிலவு நிறைந்த பௌர்ணமி நாளில் பரதவர் இன ஆண்கள் தங்கள் தொழிலான மீன்பிடி தொழிலுக்குச் செல்லாமல் தம் மகளிருடன்; கடற்கரையில் சுறாமீனின் கொம்மை நட்டு, அதில் தங்கள் தெய்வம் இருப்பதாக எண்ணி தாழைப்பூ மாலை அணிந்து, பனைமர கள்ளினை உண்டு விளையாடுவர் என்கிறது பட்டினப்பாலை. இதனுடே பரதவ இன சிறுவர்களின் விளையாட்டுகள் பற்றி விளக்குகையில் கடற்கரை மணல் பரப்பில், கடலில் வாழும் இறால் மீன்களைப் பிடித்து சுட்டு தின்றும், மணலில் படர்ந்து கிடக்கும் அடம்பின் பூவினைத் தலையில் சூடிக்கொண்டு அதனுடன் ஆம்பல் பூக்களையும் சூடிக்கொண்டு ஆட்டுக்கிடாய் சண்டையும், கௌதாரிப் பறவைகளை சண்டையிடவிட்டும் மகிழ்ந்தனர் என விளக்குகிறது. மேலும் மரங்களில் உறையும் பறவைகளைக் கவணில் கல் வைத்து வீசி எறிந்தும் விளையாடுவர் என சிறுவர்கள் விளையாட்டுகளைப் படம் பிடித்து காட்டியுள்ளார் ஆசிரியர். இவ்வாறாக காவிரிப்பூம்பட்டின மக்களின், குறிப்பாக பரதவ இன மக்களின் விளையாட்டான, கடற்கரை மணற்பரப்பில் விளையாட்டு, கடல்சார்ந்தப் பொருள்கள் கொண்டு விளையாட்டு என விளக்குவதன்வழி அம்மக்கள் தாங்கள் திணை நிலத்தையே மையமிட்டு திணைக் குடிகளாகவே இருந்துள்ளதை பட்டினப்பாலை எடுத்துக்காட்டுகிறது. இக்ககருத்தினையே,

**முழு முதல் அரைய தடவுநிலைப் பெண்மணக்**
**கொழு மடல் இழைத்த சிறுகோல் குடம்பைக் கருங்கால்**
**அன்றில்**

**(குறுந்தொகை, பாடல்- 301)**

என்று குறுந்தொகையும் விளக்குகிறது. தமிழர்ப்; பண்பாட்டு மரபில் திணை சார்ந்த விளையாட்டுக்கள் பெரும் அளவில் போற்றப்பட்டுள்ளமை இதன்வழி அறியமுடிகிறது. இவ்வாறே

**நெய்தல் நிலத்தில் நுளையர்க்கு வலைவளம்**
**தப்பில், அம் மகளிர் கிறையுடன் குழிஇச்**
**சுற்றாவுக் கோடு நாட்டுப் பரவுக் கடன் கொடுத்தலின்**
**ஆண்டு வருணன் வெளிப்படும் என்றார்”**
**(தொல்காப்பிய மேற்கோள் நச்சினார்க்கினியர் விளக்க உரை)**

ஏன நெய்தல் நில மக்களின் விளையாட்டுப் பற்றிய விளக்கத்தினைத் தொல்காப்பிய பொருளதிகார அகத்திணையியல் ஐந்தாவது நூற்பாவிற்கு உரைகாணும்கால் எடுத்துக் கூறியுள்ளார் உரையாசிரியர் நச்சினார்க்கினியர்.

**பட்டினப்பாலை உணர்த்தும் தமிழர் பண்பாட்டில் விழாக்கள்**

தமிழர் மரபில் விழாக்களுக்கு முக்கியத்துவம் வழங்கி முன்னெடுக்கும் வழக்கு சங்க காலம் முதலே இருப்பதை பல இலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன. “சங்க இலக்கியங்களில் சங்க காலத் தமிழர்கள் கொண்டாடிய விழாக்கள் பற்றி குறிப்புகள் கிடைத்துள்ளன. அவற்றுள் சில சமயம் தொடர்பானவை, சில சமூகம் தொடர்பானவை. விழாக்களின் போது பாணரும் கூத்தரும், ஆடியும், பாடியும் மகிழ்வித்தனர். நகரங்கள் சில விழவு மேம்பட்டழவிறல் மூதூர் என்று பாரட்டப்பட்டுள்ளனர்.”5 அவ்வகையில் மகளிர் வெறியாடி விழாக் கொண்டாடும் முறைமையை

**வெறி ஆடு மகளிரொடு செறியத் தாஅய்**
**குழல் அகவ, யாழ் முரல,**
**முழவு அதிர முரசு இயம்ப**
**விழவு அறா வியல் ஆவணத்து**
**(பட்டினப்பாலை, பாடல்.** 155-158)

என்ற பாடல் வரிகள் மூலம் வெறியாட்டு எடுத்தற்குரிய முருகனுக்கும், பிறப்பு அறுதற்குக் காரணமாகிய தெய்வங்களுக்கும் புகார் நகரிலே விழாக்கள் முன்னெடுக்கப்பட்டதாகவும், அவ்வேளையில் மகளிரின் பாடல்களுக்கு ஏற்பத் துறைக் கருவியாகிய குழல், நரம்பு கருவியாகிய யாழ், தோல் கருவியாகிய முழவு, முரசு என இசைக்கருவிகள் ஒலிக்க புகார் நகரின் அகன்ற ஆவண வீதியல் மக்கள் நீங்காமல் விழாக்கள் நடைபெறும் என்பதை, ஆசிரியர் உருத்திரங்கண்ணனார் தமிழர் மரபில் விழாவின் முக்கியத்துவத்தை பட்டினப்பாலை வழியாக எடுத்து விளக்கியுள்ளார்.

முடிவுரை

பண்பாடு என்பது பல கூறுகளின் ஒன்றுபட்ட தொகுப்பு என்பதை ஆய்வின் வழி விளக்கமுடிகிறது. அப்பண்பாட்டு விழுமியங்கள் ஒவ்வொன்றும் கிளைத்து விரிவாக்கம் பெறுவதே இலக்கியங்களின் பொருண்மைக் கட்டமைப்பாக அமைந்துள்ளதை காணமுடிகிறது.

அவ்வகையில் பட்டினப்பாலைத் தமிழர்களின் பண்பாட்டு களஞ்சியம் எனலாம். இலக்கியம் முழுவதும் ஐம்பூதங்களின் நிலைப்பாட்டை அறிதல், அறம் பிறழாமல் தொழில் செய்தல், மக்கள் ஒற்றுமையுடன் வாழ்தல், குறிப்பாக பல மொழி பேசுவோராயினும் ஒன்றுபட்டிருத்தல், சங்ககால மக்களின் விளையாட்டு, விழாக்கள் போன்ற கருத்துகளுடன், எதிர் நாடாயினும் போர் என்றால் முறையான முன்னறிவிப்புடன் செல்வது உள்ளிட்ட பண்பாட்டு மரபுகள் விரவி விளக்கப்பட்டுள்;ள இலக்கியமாக பட்டினப்பாலை திகழ்கிறது.

**அடிக்குறிப்பு**

1. சு. அய்யனார், சங்க இலக்கியங்களில் பண்பாட்டு மரபுகள் International Journal of Tamil Language and Literary Studies, Vol. 1, Issue 1, July – 2018.
2. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானுடவியல், ப.148
3. மேலது ப.148
4. திருமதி. சா. ரிஸ்வானா பர்வீன், பட்டினப்பாலையில் வணிகச் செய்திகள், தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ், Vol. 1, Issue 1, July – 2018, g.61.
5. வி. கார்த்திகாயினி;, சங்க இலக்கியங்களில் விழாக்கள், International Journal of Tamil Language and Literary Studies, Vol. 2, Issue 4, July – 2019. g. 39.

**துணைநூற் பட்டியல்**

1. இராசமணிக்கனார். மா. பத்துப்பாட்டு ஆராய்ச்சி. சாகித்திய அகாதமி புதுதில்லி-001. 2012.
2. கரிகாலன் நை.சி (தொ.ஆ). பத்துப்பாட்டு ஆய்வுகள். நியூ செஞ்சுரி புக்கவுஸ் (பி) லிட்.சென்னை. 2011.
3. சாமிநாதையர் வே. சா. (ப.ஆ). பத்துபாட்டு மூலமும் நச்சினார்கினியருரையும். தமிழ்ப்பல்கலைக்கழகம்.; தஞ்சாவூர். 1986.
4. நச்சினார்க்கினியர் (உ.ஆ). ஐம்பெரும்காப்பியங்கள் சிவகசிந்தாமணி-1. இளங்கணி பதிப்பகம். சென்னை. 2006.
5. பரமசிவானந்தம்.அ.மு. சமுதாயமும் பண்பாடும். தமிழ்க்கலைப் பதிப்பகம்.1972
6. மறைமலையடிகள். பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை. திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம். சென்னை. 1966.
7. மாணிக்கவாசகன். ஞா (உ.ஆ). தொல்காப்பியம் மூலமும் உரையும், உமா பதிப்பகம். சென்னை.01. 2004.